| | | |
|---|---|---|
| சாட்சி : DW 1<br>திரு.கோவிந்தன்<br>த.பெ. திரு. அய்யாசாமி | அ.வ.எண்.207/2011 | 25.09.2025 |

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) எனக்கு மொத்தமாக எவ்வளவு நிலம் சொந்தமாக உள்ளது என்றால் 1 ஏக்கர். மேற்படி நிலத்தில் யார் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் நான் தான் விவசாயம் செய்து வருகிறேன். எனது நிலத்திற்கு பக்கத்தில் உள்ள நிலம் யாருடையது என்றால் வாதி ஜெயலெட்சுமி உடையது. மேற்படி ஜெயலெட்சுமியின் நிலம் எவ்வளவு என்றால் 37 செண்ட் ஆகும்.

2) நான் வாதி ஜெயலெட்சுமியிடம் எந்த வருடம், எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால் 17 வருடத்திற்கு முன்பு ரூ.20,000/– கொடுத்தேன். மேற்படி தொகை கொடுத்தபோது பத்திரம் எழுதினோமா என்றால் தொகை கொடுத்தபோது வாய்மொழியாக தான் சொன்னார். யார் அவ்வாறு சொன்னார்கள் என்றால் வாதி ஜெயலெட்சுமியின் கணவர் 3 வருட போக்கியத்திற்காக தொகையை பெற்றுக்கொண்டார்.

3) 3 ஆண்டுகளுக்கு பின்னிட்டு வாதி திருப்பி கொண்டாரா என்றால் இல்லை, நானே வைத்துக்கொள்ள சொன்னார். அதன் பிறகு நான் தொகை கேட்டேனா என்றால் கேட்டேன், மெதுவாக தொகை கொடுக்குமாறு சொன்னார்கள். நான் முதல் முறையாக கேட்ட போதே வாதி நிலத்தை வைத்துக்கொள்ளுமாறு கூறினாரா என்றால் ஆமாம். நான் சொல்வதுபோல் நான் போய் எதுவும் வாதியிடம் கேட்கவில்லை என்றாலும், ஆனால் வாதியிடம் கேட்டதாகவும், அதற்கு வாதி நிலத்தை என்னை வைத்துக்கொள்ளுமாறு கூறியதாகவும், வழக்கிற்காக பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4) 3 ஆண்டுகள் தாவா சொத்தில் சாகுபடி செய்தேனா என்றால் ஆமாம். என்ன சாகுபடி செய்தேன் என்றால் வாழை. நான் 3 ஆண்டுகள் வழக்கு சொத்தில் வாழை சாகுபடி செய்ததற்கு சாகுபடி அடங்கல் கணக்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

வழக்கு குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.